11 OCT 2014
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்ரம்பர்/ஒக்டோபர் 2014)

## TLS 3102 நாட்டாரியல் கோட்பாடுகள்

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

---

01. "வரலாற்று நிலவியல் ஆய்வுமுறையைப் பின்பற்றி வாய்மொழிக் கதையொன்றின் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்ய முடியும்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆறு.இராமநாதனின் நிட்டூரிக் கதை ஆய்வின் அடிப்படையில் அலசுக.
(25 புள்ளிகள்)

02. (அ) க.கைலாசபதி சங்க இலக்கியங்களிலே பயின்று வருவதாகக் குறிப்பிடும் வாய்மொழி வாய்பாட்டுக் கூறுகளின் தன்மைகள் பற்றிச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.
(10 புள்ளிகள்)
(ஆ) வாய்மொழிப் பாடல்களிலே வாய்மொழி வாய்பாட்டு உற்பத்திக் கூறுகள் விரவி வருமாற்றை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுக.
(15 புள்ளிகள்)

03. பிராப் குறிப்பிடும் அமைப்பியல் கூறுகளை தமிழ் நாட்டார் கதைகளுக்குப் பொருத்திப் பார்க்க முடியுமா? ஆராய்க.
(25 புள்ளிகள்)

04. "நாட்டாரியல் சார்ந்த உளப்பகுப்பாய்வு ஆய்வாளர்கள் நாட்டார் இலக்கியங்களும் புராணக் கதைகளும் அடக்கி வைக்கப்பட்ட ஆசைகளைக் குறியீட்டுப் போர்வையில் வெளிப்படுத்துவதாகக் கருதுகின்றனர்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.
(25 புள்ளிகள்)

05. அரசியல் நோக்கங்களுக்காக நாட்டார் வழக்காறுகளைப் பயன்படுத்துவதிலுள்ள சாதக, பாதக அம்சங்களை இலட்சியக் கோட்பாட்டினை (Ideological Theory) அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
(25 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்கு** விளக்கக்குறிப்பு எழுதுக.

(அ) நாட்டார் வழக்காற்றுப் பிரதிக்கும் அதன் சூழலுக்கும் இடையிலான தொடர்பு.
(ஆ) பயன்பாட்டுக் கோட்பாடும் (Functional Theory) நாட்டாரியலும்
(இ) பண்பாட்டிடை ஒப்பீட்டுக் கோட்பாட்டின் (Cross – Cultural Theory) அடிப்படையில் புராணக்கதைகள்
(ஈ) நாட்டாரியல் ஆய்வுகளில் கள ஆய்வின் முக்கியத்துவம்
(12½ x 2 = 25 புள்ளிகள்)

*****